**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். .02.2019

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாசி மாதம் 17ஆம் நாள் **19.02.2019 புதன்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி–அல்லிநகரம் நகராட்சி பகுதியில் விடுபட்ட கூடுதல் குடிநீர் குழாய் இணைப்புகள் **6590** எண்ணம் வழங்கும் பணிக்கு கடந்த **22.01.2019** ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோப்பட்டதில் எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மீண்டும் **14.02.2019** ம் தேதியில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி தொகை | கூடுல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | M/s Ujwala Infratech ( India ) pvt. Ltd.Tirupati ) | 200.30 | 19830393.00 | 1.00% குறைவு |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டுத்தொகையை விட 1.00% குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s Ujwala Infratech ( India ) pvt. Ltd.Tirupati அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணியானது தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட திட்டப்பணியாகும். எனவே, பொது மக்கள் குடிநீர் அவசியம் கருத்தினைக்கொண்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1124/2018/இ2)

**தீர்மான எண். 894 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.**

## <u>பொருள் 02</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் கணிணிகளின் உத்திரவாதம் வருடாந்திர பராமரிப்பு பணி முடிவடைந்து விட்ட நிலையில் நான்கு கணிணி மானிட்டர்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது. தற்போது தீவிர வரி வசூல் பணி தொடங்கியுள்ளதால், வரி வசூல் மையங்களில் உள்ள கணிணிகளுக்கு பயன்படுத்தத்திக்கொள்ளும் வகையில் இவற்றை பழுது நீக்கம் செய்யவும், தேவையான உதிரி பாகங்களை மாற்றவும் உத்தேச செலவினம் ரூ.5000/- ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.390 / 2019 /இ1)**

**<u>தீர்மான எண். 895 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 03</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 33 வார்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட உள்ள தானியங்கி குடிநீர் மையங்கள் ( Water ATM ) அமைக்கும் பணிகள் தொடர்பாக 30.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோர தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறைஅனுமதி விபரம் | பட்டியல் விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | டீரினிட்டி மிரர் – தமிழ்நாடு<br>நமது புரட்சித்தலைவி அம்மா – தமிழ்நாடு | தமிழ் வளர்ச்சி (ம) செய்தி ( விளம்பரம்) த்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் வெளியீட்டு ஆணை எண். 4168/ ஒப்பந்தப்புள்ளி/ விளம்பரம் / 2018, நாள்.09.10..2018 | பட்டியல் எண்: AAA/ 0743/18-19.Date. 13.10.2018 | **54338** |

மேற்கண்ட தொகை ரூ.54338/– ஐ ( ரூபாய்ஐம்பத்தி நான்காயிரத்து முன்னூற்றி முப்பத்தி எட்டு மட்டும் ) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2883/2018/இ2)

**<u>தீர்மான எண். 896 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

**பொருள் 04:**

தேனி – அல்லிநகரம் நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பிரிவு தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட பழைய பொருட்கள் ஏலம் விடுதல் தொடர்பாக **30.01.2019** அன்று தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **நாளிதழ்** | **செய்தி மக்கள் தொடர்பு துறைஅனுமதி விபரம்** | **பட்டியல் விபரம்** | **தொகை** |
|---|---|---|---|---|
| 1 | நமது முரசு, முருங்கம்பாக்கம், புதுச்சேரி | தேனி மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலக வெ.ஆ.எண். 27/ செ ம தொ.அ / தேனி. நாள். **30.01.2019** | பட்டியல் எண்: 00210/.Date. 01.02.2019 | **8064** |

மேற்கண்ட தொகை ரூ.**8064/–** ஐ ( ரூபாய் எட்டாயிரத்து ஆறுபத்தி நான்கு மட்டும் ) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**3224 / 2018** /இ2)

**தீர்மான எண். 897 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் 05:**

தேனி–அல்லிநகரம் நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பிரிவு தலைமை நீரேற்று நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட பழைய பொருட்கள் உத்தேசத்தொகை ரூ50,000/. மதிப்பீட்டில் **15.02.2019** ம் தேதியில் நடைபெற்ற பொது ஏலத்தில் வரப்பெற்ற ( கோரியுள்ள ) கீழ்க்கண்ட ஏலக்கேள்வித்தொகை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள்** | **ஏலத்தில் செலுத்திய காப்புத்தொகை** | **ஏலக்கேள்வித் தொகை** | **மதிப்பீட்டுத்தொகையை விட கூடுதல் / குறைவு** |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. T.தவமணி திருமலாபுரம் | 25000/. | 53500/- | கூடுதல் |
| 2. | திருமதி. C.லட்சுமி அல்லிநகரம் | 25000/. | 52250/- | குறைவு |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட ஏலத்தில் கோரப்பெற்ற இரண்டு ஏலக்கேள்விகளில் கூடுதலான ஏலத்தொகை கோரியுள்ள திருமதி. T.தவமணி திருமலாபுரம் அவர்களின் ஏலக்கேள்வித் தொகை யினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**3224 / 2018** /இ2)

**தீர்மான எண். 898 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் 06**:

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.28369/J3/2018 நாள் 22.11.2018-ன்படி, தேனி-அல்லிநகரம் நகராட்சியில் உள்ள 33 வார்டு பகுதிகளில் முதல் நிலை குப்பை சேகரித்தல் மற்றும் தரம் பிரித்தல் ஆகிய பணிகளுக்கு 50 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு 06.02.2019ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற கீழ்க்கண்ட விபரப்படியான நிறுவனத்தில் கோரிய கேள்வி தொகை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு பணியாளர்க்கு வழங்கும் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | J.J.Info Tech., Madurai | 50 | 410 |
| 2. | Pon Ramar, Madurai | 50 | 406 |

**அலுவலககுறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள நிறுவனமான பொன்.ராமர், மதுரை என்ற நிறுவனம் ஒரு பணியாளர்க்கு ரூ.406 என குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியயத தொடர்ந்து அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய பொன்.ராமர், மதுரை என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதையும், வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

   (ந.க.எண்.3660/2018/எச்1)

**தீர்மான எண். 899 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் 07**:

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர்அவர்களின் செயல்முறை ந.க.எண்.2571/2017/J1 நாள் 14.02.2017 இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும்நோய் தடுப்பு துறைஅவர்களின் கடிதம் ந.க.எண்.856/VC-II/S2/2017-3 நாள் 23.01.2017-ன் படி, 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் வீதம் நகராட்சி பகுதியிலுள்ள 26198 குடியிருப்புகளுக்கு முதல் பகுதியாக 6 மாத காலத்திற்கு நாள் ஒன்றுக்கு 50 பணியாளர்கள் கொண்டு கொசு புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 06.02.2019-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற கீழ்கண்ட விபரப்படியான நிறுவனத்தில் கோரிய கேள்வி தொகை மனற்த்தின் பார்வைக்கும், முடிவி.கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு பணியாளர்க்கு வழங்கும் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | Trustu our sourciny solution Pvt., Ltd., Chennai | 50 | 389 |
| **2.** | Relyon Facility Services Private Ltd., Chennai | 50 | 296 |

**அலுவலககுறிப்பு:**

1. மேற்படி பணிக்கு வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள நிறுவனமான Relyon facility services private, Limited, Chennai என்ற நிறுவனம் ஒரு பணியாளர்க்கு ரூ.296 என குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியதை தொடர்ந்து அன்னாரின் ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று வேலை உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய Relyon facility services private, Limited, Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதையும், வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.143/2019/எச்1)

***தீர்மான எண். 900 1, 2. அனுமதிக்கப்பட்டது.***

## பொருள் 08:

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் உள்ள 33 வார்டு பகுதிகளில் முதல் நிலை குப்பை சேகரித்தல், தரம் பிரித்து குப்பை சேகரிக்கும் கூடத்தில் சேர்க்கவும், திடக்கழிவு மேலாண்மை திட்டம் மற்றும் அனைத்து சுகாதார பணிகளையும் தனியார் மூலம் ஒப்பந்த தடிப்படையில் காலிப்பணியிடங்களுக்கு ஏற்றவாறு பணியாளர்களைப் பெற்று துப்புரவு பணி செய்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.28369/J3/2018 நாள் 22.11.2018-ன்படி 100 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த விதிகளின்படி பெற்று பொது சுகாதாரப்பணி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அலுவலரின் அறிக்கையின்படி மேற்காணும் பணியினை 3 ஆண்டு காலம் அல்லது காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் வரையில் எது முன்னதாக அமைகிறதோ அது வரையிலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தற்சமயம் 50 தனியார் துப்புரவு பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு தேனி மாவட்ட

ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.8977/2016/E2 நாள் 16.05.2017ன்படி, 2017-2018-ம் நிதியாண்டிற்க்கான ஊதிய விகிதத்தின்படி, பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய ESI, EPF, life Insurance, Service tax, Uniforms, and safety equipments ஆகியவற்றை சேர்த்து மேற்படி பணிக்கு ஒரு ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.76.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரத்திற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. பொதுசுகாதார பணியினை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றுமேற்படி பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையின மேற்கொள்டதையும் மனறம்அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3660/2018/எச்1)

**தீர்மான எண். 901 1, 2, 3 மற்றும் 4. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 09:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனையத்தில் காலியாக உள்ள தெற்கு பக்க கடை எண்4, 5, 7, மற்றும் 8 ஆகிய நான்கு கடைகளுக்கு தொடர்ந்து 10 முறைக்கு மேலம் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் ஏலத்தில் கலந்துகொள்ள முன்வரவில்லை. மேற்கண்ட கடைக்கு முன்புறம் கடந்தாண்டு இருசக்கர வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளதால், கடைகள் மறைவாக உள்ளதால் வியாபாரம் பாதிக்கும் சூழல் உள்ளது.

மேற்கண்ட கடைகளுக்கு தொடர்ந்து பலமுறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி யாரும் ஏலத்தில் கலந்து கொள்ளாததால், நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சி வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு மேற்கண்ட கடைகளுக்கான வைப்புத் தொகையினை வைப்புத் தொகையினை ரூ:1,50,000/- என்பதை குறைத்து ரூ:25,000/- என நிர்ணயம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு மேற்கண்ட கடைகளுக்கான வைப்புத் தொகையினை ரூ:25,000/- என நிர்ணயம் செய்திட மன்ற அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.5647/2018/அ3)

**தீர்மான எண். 902 1, 2. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் 10:**

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு சந்தை மற்றும் மேற்குச் சந்தையில் உள்ள காலியிடங்களில் நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் புதிததாக கீழ்கண்டவாறு வணிக கடைகள் கட்டுவதற்கு, மேற்கண்ட கடைகளுக்கு முன்பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரும் பொருட்டு நிர்ணயம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகையினை நிர்ணயம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | கடையின் ஒன்றின் தோராய அளவு | வைப்புத் தொகை கடை ஒன்றுக்கு (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | கிழக்கு சந்தை BSNL அலுவலக வடக்கு பக்கம் உள்ள காலியிடம் - 2 கடைகள் | 10 X 12 – 120 ச.அடி. | ரூ: 3,00,000/- |
| 2 | கிழக்கு சந்தை நாடார் பெண்கள் உயர்நிலைப் பள்ளி வாசல் தெற்கு பக்க உள்ள காலியிடம் - 1 கடை | 10 X 20 – 200 ச.அடி. | ரூ: 4,00,000/- |
| 3 | கிழக்கு சந்தை BSNL அலுவலக மேற்கு பக்கம் உள்ள காலியிடம் - 2 கடைகள் | 10 X 20 – 200 ச.அடி. | ரூ: 4,00,000/- |
| 4 | மேற்கு சந்தை முதல் கேட் வாம்பே கழிப்பிடம் அருகில் உள்ள காலியிடம் - 1 கடைகள் | 10 X 20 – 200 ச.அடி. | ரூ: 4,00,000/- |
| 5 | மேற்கு சந்தை கால்நடை மருத்துவமணை கட்டடத்தின் அருகில் உள்ள காலியிடம் - 2 கடைகள் | 11 X 12 – 132 ச.அடி. | ரூ: 4,00,000/- |
| 6 | மேற்கு சந்தை கால்நடை மருத்துவமணை கட்டடத்தின் முன்புறம் உள்ள காலியிடம் - 3 கடைகள் | 10 X 20 – 200 ச.அடி. | ரூ: 4,00,000/- |
| 7 | மேற்கு சந்தை தெற்கு பார்த்த காய்கறி கடை நுழைவு வாயில் முன்பு தெற்கு பக்கம் உள்ள காலியிடம் - 1 கடை | 11 X 16 – 176 ச.அடி. | ரூ: 4,00,000/- |

| வ.எண் | விபரம் | கடையின் ஒன்றின் தோராய அளவு | வைப்புத் தொகை கடை ஒன்றுக்கு (ரூபாய்) |
|---|---|---|---|
| 8 | மேற்கு சந்தை தெற்கு பார்த்த காய்கறி கடை நுழைவு வாயில் முன்பு வடக்கு பக்கம் உள்ள காலியிடம் - 1 கடை | 14 X 10 – 140 ச.அடி. | ரூ: 4,00,000/- |
| 9 | மேற்கு சந்தை தெற்கு பக்கம் தக்காளி காய்கறி கடைக்கு வடக்கு பக்கம் உள்ள காலியிடம் - 1 கடை | 6 X 11 – 66 ச.அடி. | ரூ: 4,00,000/- |
| 10 | கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலையம் கிழக்கு பகுதி நகரப் பேருந்துகள் வந்து செல்லும் கீழ் பகுதி கிழக்கு பக்கம் உள்ள காலியிடத்தில் இருசக்கர வாகன காப்பகம் | 122 X 38 – 4,636 ச.அடி. | ரூ: 5,00,000/-<br>கூடுதல் பொறுப்புத் தொகை<br>ரூ: 3,00,000/- |

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) நகராட்சி வருவாயினை அதிகரிக்கும் பொருட்டு மேற்கண்டவாறு புதிதாக கடைகள் கட்ட மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட கடைகளுக்கு முன்பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட கடைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகைக்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5647/2018/அ3)

**<u>தீர்மான எண். 903 அ, ஆ மற்றும் இ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 11</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி குடிநீர் இணைப்புகளுக்கு தேனி மாவட்ட அரசிதழ் எண்: 7 நாள்: 19–09–2002.ன் படி கீழ்கண்டவாறு வைப்புத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது.

| விபரம் | குடியிருப்பு உபயோகம் | குடியிருப்பில்லாத உபயோகம் |
|---|---|---|
| வைப்புத் தொகை | ரூ.4,000/– | ரூ.8,000/– |

அதன் அடிப்படையில் நகராட்சி பகுதியில் புதிதாக வழங்கப்படும் அனைத்து குடிநீர் இணைப்புகளுக்கும் தற்போது மேற்கண்டவாறு வைப்புத் தொகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போது உள்ள குடிநீர் ஆதாரமான அரப்படிதேவன்பட்டி குடிநீர் திட்டத்தில் போதிய நீராதாரம் இல்லாமலும், மற்றும் குன்னூர் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட குழாய்கள் வெள்ளப்பெருக்கின் காரணமாக தொடர்ந்து

சேதாரம் அடைந்ததன் காரணமாகவும், நகரில் உள்ள இதர குடிநீர் திட்டங்களான பழனிச்செட்டிபட்டி குடிநீர் திட்டம், குன்னூர் குடிநீர் திட்டம் மற்றும் வீரப்பஅய்யனார் கோயில் பனசலாறு குடிநீர் திட்டங்கள் மூலம் நகர் பகுதியில் குடிநீர் சீரான முறையில் வழங்க இயலாத நிலையில் ஏற்கனவே உள்ளது.

இந்நிலையில் தேனி – அல்லிநகரம் உள்ளாட்சி நிதி தணிக்கை 2010–11–ம் ஆண்டு குடிநீர் நிதி தணிக்கை பத்தி எண்: 15. –ல் பழைய குடிநீர் இணைப்புகளுக்கு கூடுதல் வைப்புத் தொகை ரூ:2,40,48,000/– வசூல் செய்யப்படவில்லை என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி பகுதியில் தினசரி சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் வகையில் வைகை அணையின் பிக்கப் அணையிலிருந்து ரூ. 68.83 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்திட அரசாணை எண்: 12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.2) துறை நாள்: 28–01–2013.ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

இந்நிலையில் தேனி – அல்லிநகரம் நகர்மன்ற தீர்மானம் எண்: 452 நாள்: 27–09–2012. ன் படி மேற்கண்ட புதிய குடிநீர் மேம்பாட்டு திட்டம் செயல்பாட்டிற்கு பின் கீழ்கண்டவாறு வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு, பார்வை 5ல் கண்டுள்ள தேனி மாவட்ட அரசிதழ் எண்: 7 நாள்: 19–09–2002 மற்றும் தேனி மாவட்ட அரசிதழ் எண்: 7 நாள்: 13–07–2016–ல் ஒப்புதல் வழங்கப்பட்ட துணை விதிகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு திருத்தியமைக்கப்பட்ட கூடுதல் குடிநீர் வைப்புத் தொகை வசூல் செய்வதிலிருந்து விலக்கு அளித்திடவும், அதன் பொருட்டு குடிநீர் விநியோக துணை விதிகளில் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

| விபரம் | குடியிருப்பு உபயோகம் | | குடியிருப்பில்லாத உபயோகம் | |
|---|---|---|---|---|
| | தற்போதைய கட்டணம் | திருத்தம் செய்யப்பட்ட கட்டணம் | தற்போதைய கட்டணம் | திருத்தம் செய்யப்பட்ட கட்டணம் |
| வைப்புத் தொகை | ரூ.4,000/– | ரூ.5,000/– | ரூ.8,000/– | ரூ.10,000/– |
| மாதாந்திர கட்டணம் | ரூ.50/– | ரூ.235/– | ரூ.100/– | ரூ.705/– |

இந்நிலையில் பொதுமக்கள் ஆட்சேபனை கடிதத்தில், மாதாந்திர கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டதில் கூடுதலாக உள்ளது எனவும், இந்நகரில் வாழும் பெரும்பாலன மக்கள் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருகின்றனர் எனவும், பெரும்பாலும் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருவதாகவும் , மேற்கண்ட கூடுதலாக நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர கட்டணத்தொகை குறைக்கக்கோரியுள்ளனர்.

மேற்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்ட மிக அதிகப்படியான குடிநீர் கட்டணத்தினை வசூல் செய்வது நடைமுறையில் சாத்தியமில்லாதது எனவும், எனினும் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பொது மக்கள் நலன் கருதி சீரான குடிநீர் விநியோகம் செய்திடும் பொருட்டு புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்திட வேண்டியதன் அவசியம் கருதி, தற்சமயம் மேற்கண்ட நிதிப்பகிர்வில் புதிய குடிநீர் திட்டத்தினை செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளவும், மேலும் வரும் காலங்களில் மேற்கண்ட அதிகப்படியான குடிநீ கட்டணத்தினை குறைத்திடும் வகையில் அரசாணையில் குறிப்பிடப்பட்ட நிதிப்பகிர்வின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கடன் தொகையினை இதர திட்டத்தின் கீழ் மான்யமாக பெற்று திட்டத்தினை செலயல்படுத்திட புதிய குடிநீர் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.2) துறை அரசாணை எண்: 12 நாள்: 28–01–2013 அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பொது மக்கள் பாதிப்படையாதவாறு மற்றும் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளும் வகையில் கீழ்கண்டவாறு மாதாந்திர கட்டணத்தினை மாற்றி அமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**மாதாந்திர கட்டணம்**

| விபரம் | **தேனி மாவட்ட அரசிதழ் எண்: 7 நாள்: 19–09–2002** | | **தேனி மாவட்ட அரசிதழ் எண்: 7 நாள்: 13–07–2016** | |
|---|---|---|---|---|
| | **குடியிருப்பு உபயோகம்** | **குடியிருப்பு அல்லாத உபயோகம்** | **குடியிருப்பு உபயோகம்** | **குடியிருப்பு அல்லாத உபயோகம்** |
| மாதாந்திர கட்டணம் | ரூ.50/– | ரூ.235/– | ரூ.100/– | ரூ.705/– |
| தற்போது திருத்தியமைக்கவேண்டிய கட்டண விபரம் | **குடியிருப்பு உபயோகம் ரூ.100/–** | | **குடியிருப்பு அல்லாத உபயோகம் ரூ.200/–** | |

**<u>அலுவலக குறிப்பு:</u>** அ) ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு திருத்தியமைக்கப்பட்ட கூடுதல் குடிநீர் வைப்புத் தொகை வசூல் செய்வதிலிருந்து விலக்கு அளித்திட மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு பொது மக்கள் பாதிப்படையாதவாறு மற்றும் நடைமுறையில் ஏற்றுக்கொள்ளும் வகையில் மாதாந்திர கட்டணத்தினை குறைத்து நிர்ணயம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6119/2015/இ1)

**<u>தீர்மான எண். 904 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 12:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான உப்பார்பட்டி உரக்கிடங்கில், குப்பைகளை பிரித்து எடுத்து அவைகளை வெளிப்பயன்பாட்டிற்கு கொண்டு செல்லும் பொருட்டு, அதற்கான இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ள நிலையில் அதற்கான மின் விநியோகம் தேவைக்கேற்ப மும்முனை சப்ளை தினசரி போதுமான அளவு கிடைக்கப்பெறாத நிலையில் உள்ளதால், அதற்கான கூடுதல் மின் அமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 475000/- ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம;. (ந.க.எண்.398/2019/இ1)

**<u>தீர்மான எண். 905 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள் 13:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2018-19–ம் ஆண்டின் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் Package - 1–ல் குறிப்பிட்டுள்ள தெருக்களில் ரூ.**285.00** இலட்சம் மதிப்பீட்ல் சாலைப்பணி மேற்கொள்ளுவதற்கு 08.02.2019–ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி சாலைப்பணி செய்வதற்கு கீழ்கண்ட விலை விகிதத்தின்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணிக்கான மதிப்பீடு தொகை ( ரூ ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.டி.தமிழ்ராஜன் | 24113407.70 | 25313868 | 4.98 % கூடுதல் |
| 2 | திரு.ஆர்.பரமானந்தன் | | 25534970 | 5.98 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கோரியுள்ள திரு.டி.தமிழ்ராஜன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீடை விட 4.98 % கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தினை குறைத்து தர கோரியதில் பணியாளர்களின் ஊதியம் மற்றும் கட்டுமான பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக விலையினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

மேற்படி பணியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி **2.7.2**–ன்படி அலுவலக மதிப்பீட்டினை விட 4.98 % கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் குழுவிற்கு அனுப்ப உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

1. ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.டி.தமிழ்ராஜன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீட்டை காட்டியும் 4.98 % கூடுதலான விலை விகிதத்தை கொண்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி **2.7.2—**ன்படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், மற்றும் இப்பணியானது பொதுமக்களின் நலனினை கருத்தில் உடனடியாக பணி மேற்கொள்ள வேண்யது இருப்பதால் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை திரு.டி.தமிழ்ராஜன் என்பவர் செய்வதற்கு உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**3374/2018/**இ1)

**தீர்மான எண். 906 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 14:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2018-19—ம் ஆண்டின் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் Package - 2—ல் குறிப்பிட்டுள்ள தெருக்களில் ரூ.**169.30** இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணி மேற்கொள்ளுவதற்கு 08.02.2019—ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி சாலைப்பணி செய்வதற்கு கீழ்கண்ட விலை விகிதத்தின்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணிக்கான மதிப்பீடு தொகை ( ரூ ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு.சி.நல்லகுரும்பன் அன் கோ | 14363913.68 | 15069790 | 4.91 % கூடுதல் |
| 2 | திரு.ஜெ.செந்தில்குமார். | | 16533964 | 15.11 % கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கோரியுள்ள திரு.சி.நல்லகுரும்பன் அன் கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீடை விட 4.91 % கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தினை குறைத்து தர கோரியதில் பணியாளர்களின் ஊதியம் மற்றும் கட்டுமான பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக விலையினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி பணியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி **2.7.2–ன்படி** அலுவலக மதிப்பீட்டினை விட 4.91 % கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் குழுவிற்கு அனுப்ப உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள திரு.சி.நல்லகுரும்பன் அன் கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீட்டை காட்டியும் 4.91 % கூடுதலான விலை விகிதத்தை கொண்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி **2.7.2–ன்படி** நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், மற்றும் இப்பணியானது பொதுமக்களின் நலனினை கருத்தில் உடனடியாக பணி மேற்கொள்ள வேண்டியது இருப்பதால் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை திரு.சி.நல்லகுரும்பன் அன் கோ என்பவர் செய்வதற்கு உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3374/2018/இ1)**

**<u>தீர்மான எண். 907 1, 2 மற்றும் 3. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 15</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், திருச்சி | எண்: 400 நாள்: 27-01-2019 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 18/ ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2019 நாள்: 26-01-2019. | ரூ: 42,120/- |
| | | | **மொத்தம்** | **ரூ: 42,120/-** |

மேற்கண்ட தொகை ரூ:42,120/- (ரூபாய்: நாற்பத்து இரண்டு ஆயிரத்து நூற்று இருபது மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.61 /2019 /இ1)**

**<u>தீர்மான எண். 908 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 16</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையம் தரைதளம் தங்கும் மேற்கு பகுதி கடை எண்:09 (வரிவதிப்பு எண்: 2005024) குத்தகையினை குத்தகைதாரர் திரு.வி.சரவணன், என்பவர் 31-12-2018 முதல் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேலும் மேற்கண்ட குத்தகை இனத்திற்கான நிலுவைத் தொகை ரூ:23,000/- நகராட்சி கருவூலத்தில் 21-01-2019 அன்று ரொக்கமாக செலுத்தியுள்ளார் மேலும் மீதத் தொகை ரூ:92,501/- அன்னாரது வைப்புத் தொகை கணக்கில் செய்திட கோரியுள்ளார். காலங்கடந்த வைப்புத் தொகையில் மேற்கண்ட தொகையினை குத்தனை இனத்தில் ஈடுசெய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிவிதிப்பு எண்: | குத்தகைதாரர் பெயர் : | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | |
|---|---|---|---|
| | | நாள் | தொகை |
| **125/2005024** | **வி.சரவணன்** | 26-05-2006 | ரூ: 15,000/- |
| | | 05-07-2006 | ரூ: 63,000/- |
| | | 21-07-2006 | ரூ: 15,000/- |
| | | **மொத்தம்** | **ரூ: 93,000/-** |

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கில் உள்ள மேற்கண்ட தொகையினை குத்தகை இனத்திற்கு ஈடுசெய்திட மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். /2019 /அ3)**

**<u>தீர்மான எண். 909 அ, ஆ. அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 17</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் பணிபுரியும் உள் மற்றும் வெளி அலுவலர்களின் வருகை விபரத்தினை Bio Time Attendance முறையில் பராமரிப்பதற்கு **6** இயந்திரங்கள் மற்றும் அதற்கான நெட்வொர்க்கிங் வசதி செய்யும் பணி மேற்கொள்ள இருப்பதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**200000/–**ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்: 294 / 2019 / இ1)

**<u>தீர்மான எண். 910 1, 2. அனுமதிக்கப்பட்டது.</u>**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி